*கவனிக்க* .- *27.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* IV *(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1831 - 2013 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2013.10.04

*1831 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 862 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 863 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 879 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசாங்க அறிவித்தல்கள்

## உங்கல் அலுத்நுவர கதரகம தேவாயலயத்தின் வருடாந்த எஸல பெரெஹெர - 2013

1. உங்கல் அலுத்நுவர கதரகம தேவாலயத்தின் எஸல பெரஹெர 2013, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி ஆரம்பமாகி ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி நீர் வெட்டுதலுடன் சுபமாக நிறைவுறும்.

2. ஆலய பூமியின் மேல் வீதி, கிழக்கு பக்கம், மேற்கு பக்கம் ஆகியன பிரித் வத்த, கல்வத்த மாலுகார வத்த மற்றும் வடக்கு திசையில் அமைந்துள்ள உடகக கெதர வத்த ஆகிய பிரதேசம் பெரஹெரவிற்கு வருகை தரும் நடன குழு மற்றும் பார்வையாளர்களுக்கு உகந்த பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ளது.

3. விகார வளாகம், போதி வளாகம், சைத்திய வளாகம், தேவாலய சுற்றம், கீழ் வளாகம், கலாயாதன வளாகம், மத்திய வளாகம் மற்றும் அதனை சூழ உள்ள பிரதேசத்தில் போசனம் செய்தலை தடை செய்கிறேன்.

4. உற்சவ பூமியில் வியாபாரம் செய்தலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை குத்தகைக்கு விடுதல் பற்றி அறிக்கை மூலம் விளம்பரப்படுத்துவேன்.

(i). உற்சவ காலங்களில் வியாபாரம் செய்தலுக்காக குத்தகைக்கு விடப்படும் தற்காலிக கடை காணி மற்றும் அதனை சூழ உள்ள பிரதேசத்தில் நீதி முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படாத பாண்டங்கள் விளம்பரப்படுத்தல் விற்பனை செய்தலை தடை செய்கிறேன் ;

(ii) டெங்கு பெருகுதல் தொடர்பாக அனைத்து தற்காலிக கடை உரிமையாளர்களால் ஒதுக்கப்படும் அனைத்து கழிவுகளையும் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கூலங்களில் இடவும்.

5. தேவாலயத்தின் மேல் வளாகம், மத்திய வீதி, வளாகத்தினுள் பிரவேசிக்கும் வீதி மற்றும் அவ்விரு பிரதேசங்களினுள் பூக்கள், வாசனா திரவியம், மெழுகு திரி மற்றும் தேவையான பூசை பொருட்கள் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

6. வினோத விளையாட்டுக்கள் தொடர்பான சட்டம், இத்தகைய அனைத்து வேலைகள் தொடர்பாக அனுமதி பெற்றுக்கொள் வதனூடாக பிரதேச சபை மூலம் வேண்டப்படும் குத்தகை விளையாட்டுக்கள் நடாத்துவோரால் வழங்கப்பட வேண்டும். அவ்விளையாட்டுக்கள் தொடர்பான ஒலி எழுப்பிகள் பாவிக்கப் படுமாயின் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுக்கொள்வ தோடு, மா பெரஹெர வீதிக்கு இறங்கும் போது அனைத்து வேலைகளையும் தற்காலிகமாக இடை நிறுத்தல் வேண்டும். பெரஹெர நிறைவுற்றதும் தேவையாயின் அவ்வேலையை மீண்டும் தொடரலாம்.

7. மேற்குறிப்பிட்ட (4, 6) சரத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி தேவாலய வளாகத்திலும் வேறு ஸ்தானங்களிலும் வியாபாரம் செய்தலை முழுமையாக தடை செய்கிறேன்.

8. தேவாலய வளாகம் மற்றும் மேல் வளாகத்தில் புகைப்பிடித்தல், பட்டாசு மற்றும் வெடிகளை இப்பிரதேசத்தில் வெடித்தலை தடை செய்யப்பட்டுள்ளது.

9. யானைகள் கட்டப்பட்டிருக்கும் இடங்களை அனாவசியமாக சென்றடைதல் மற்றும் அவைகளுக்கு உணவு கொடுத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

10. உற்சவ பூமியில் வாகனங்களை உட்பிரவேசித்தலுக்கு அனுமதி கொடுத்தலானது எசல உற்சவம் தொடர்பாக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திர உள்ள வாகனங்களுக்கு மட்டும். அதன்படி கீழ்குறிப்பிட்ட பாதை வாகனம் உட் பிரவேசித்தலுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

(1) கொழும்பு :- பதுளை பிரதான பாதையில் அலுத்நுவர பிரதேச செயலக சந்தியில் தேவாலய பூமிக்கு உட்பிரவேசிக்கும் பாதை;

(2) தொடபல்ல, பொகுனகம பிரதேசத்தில் தேவாலய பூமிக்குள் உட் பிரவேசிக்கும் பாதை;

(3) பிரித் வத்த, கல்வத்த, தேவாலய பிரதேசத்தில் தேவாலய பூமிக்குள் உட் பிரவேசிக்கும் பாதை.

11. தேவாலய பூமிக்குள் பிரவேசிக்கும் பாதை அனுமதிபெற்ற வாகனம் நிறுத்தலுக்கான வசதிகள் பாடசாலை மைானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

12. தேவாலய திங்கய மாளிகையின் மேல் பிரிவை அனுமதி இல்லா மல் புகைப்படம் எடுத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

சம்பிக நிரோச் தர்மபால,
பதில் பிரதேச செயலாளர்,

பிரதேச செயலகம்,
இம்புல்பே.

10- 151

---

## காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் பழுதடைந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2013.10.04 ஆந் திகதி தொடக்கம் 2013.10.18 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு அநுராதபுரம் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு, எழுத்துமூலம் 2013.10.25 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள் | காணியின் விபரங்கள் | பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள் |
| அநுராதபுரம் மாவட்டத்தின் அநுராதபுரம் காணிப் பதிவகத்தின் LDO 73/49 உடைய ஏடு | வடமத்திய மாகாண சபையின் அநுராதபுரம் மாவட்டத்தின் நுவரகம கோறளையில் எகொடகொடயில் அமைந்துள்ள இலக்கம் 757 உடைய காணிக்கு எல்லைகள் :-<br>வடக்கு : I.S.P.P. 2 இன் துண்டு இலக்கம் 756 மற்றும் 747;<br>கிழக்கு : I.S.P.P. 2 இன் துண்டு இலக்கம் 367 மற்றும் 758;<br>தெற்கு : I.S.P.P. 2 இன் துண்டு இலக்கம் 758;<br>மேற்கு : I.S.P.P. 2 இன் துண்டு இலக்கம் 756.<br>பரிமாணம் : 0ஏ. 0றூ. 27பே. | 1. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி அவர்களினால் அளிக்கப்பட்ட இலக்கம் அநு/கிநுமா/பி 504/1995.12.05 ஆந் திகதிய அளிப்புப் பத்திரம். |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/24/2013/ஏடு. தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

10-54

# வரவு செலவுத் திரட்டுக்கள்

## களனிப் பல்கலைக்கழகம்

வருமானக் கூற்று

**31, திசெம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கானது**

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| **வருமானம்** | குறிப்பு | ரூபா | ரூபா |
| அரச மானியம் | | | |
| மீண்டுவரும் செலவினத்திற்கான அரச மானியம் | 2 | 1,150,121,000 | 973,000,000 |
| புனரமைப்பு, பராமரிப்பு சேவைகளுக்கான அரச மானியம் | | 17,030,527 | 11,910,348 |
| நிலைமாறக்கூடிய மூலதன மானியம் | | 125,393,756 | 14,312,566 |
| | | 1,292,545,283 | 999,222,914 |
| **ஏனைய வருமானங்கள்** | | | |
| புதிவுக் கட்டணம் (பட்டப்படிப்பு) | | 7,491,201 | 8,451,790 |
| புதிவுக் கட்டணம் (பட்டப்பின் படிப்பு) | | 684,069 | 563,000 |
| போதனைக் கட்டணம் (பட்டப்படிப்பு) | | 307,175 | 215,750 |
| போதனைக் கட்டணம் (பட்டப்பின் படிப்பு) | | 614,754 | 513,955 |

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| ***ஏனைய வருமானம்*** *(தொடர்ச்சி)* | *குறிப்பு* | *ரூபா* | *ரூபா* |
| பரீட்சைக் கட்டணம் (புட்டப்படிப்பு) | | 587,335 | 1,359,090 |
| பரீட்சைக் கட்டணம் (பட்டப்பின் படிப்பு) | | 200,775 | 145,705 |
| முதலீடுகளிலிருந்தான வட்டி | | 35,295,603 | 31,447,011 |
| கடன்களிலிருந்தான வட்டி | | 1,656,301 | 1,659,505 |
| வெளியீடுகளின் விற்பனை | | 128,755 | 8,512 |
| சொத்துக்களில் இருந்து பெறப்பட்ட வாடகை | | 492,027 | 669,092 |
| நூலக குற்றப் பணங்கள் | | 413,556 | 410,236 |
| மருத்துவ கட்டணங்கள் | | 7,460 | - |
| துணைச் செயற்பாடுகள் - விடுதிகள் | | 2,279,486 | 3,157,575 |
| பழைய பொருட்களின் விற்பனை | | 145,270 | 54,368 |
| நானாவித வருமானங்கள் | 3 | 32,598,792 | 18,781,146 |
| வெளிவாரிப் பரீட்சை வருமானங்கள் | 4 | 189,593,848 | 118,053,078 |
| கட்டணம் அறவிடும் கற்கை நெறி/விசேட சேவைகளிலிருந்தான வருமானம் | | 121,464,708 | 129,846,112 |
| பல்கலைக்கழக பங்களிப்பு கருத்தரங்குக் கட்டணம் | | 997,148 | 7,018,838 |
| **மொத்த வருமானங்கள்** | | **1,687,503,546** | **1,321,577,677** |
| **செலவினங்கள்** | | | |
| தனியாள் சம்பளம் | 5 | 923,500,317 | 755,317,833 |
| பயணச் செலவுகள் | 6 | 2,615,030 | 7,053,483 |
| வழங்கல்கள் | 7 | 69,954,649 | 55,182,465 |
| பராமரிப்புச் செலவுகள் | 8 | 10,332,566 | 8,345,225 |
| ஒப்பந்த சேவைகள் | 9 | 174,103,223 | 155,081,276 |
| ஏனைய மீண்டுவருகைகள் | 10 | 53,271,906 | 57,527,407 |
| தேய்மானம் | | 261,661,121 | 260,525,083 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 25,295,220 | 13,324,101 |
| கட்டணம் அறவிடும் கற்கை நெறி/விசேட சேவைகளிலிருந்தான செலவினம் | | 76,802,246 | 111,172,441 |
| புனரமைப்பு மற்றும் முன்னேற்றங்களுக்கான செலவினம் | | 17,030,527 | 11,910,348 |
| **மொத்த செலவினங்கள்** | | **1,614,566,804** | **1,435,439,662** |
| **காலப்பகுதிக்கான மேலதிக/பற்றாக்குறை** | | **72,936,741** | **(113,861,985)** |

**களனிப் பல்கலைக்கழகம்**

*நிதி நிலைமை அறிக்கை*

***டிசெம்பர் 31 இல் உள்ளவாறாக சொத்துக்கள்***

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | *குறிப்பு* | *ரூபா* | *ரூபா* |
| ***நடைமுறையல்லாத சொத்துக்கள்*** | | | |
| உபகரண சொத்துக்கள் | 11 | 3,117,494,942 | 3,138,016,209 |
| குறை வேலைகள் | 12 | 437,069,274 | 361,177,657 |
| முதலீடுகள் | 13 | 767,247,815 | 628,849,622 |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| சொத்துப் பதிவேடு | 14 | 28,149,620 | 21,465,997 |
| சில்லறைக் கடன்படுநர் | 15 | 100,000 | 1,034,259 |
| வைப்புக்களும் முற்பணங்களும் | 16 | 50,281,864 | 53,528,555 |

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா | ரூபா |
| முற்கொடுப்பனவுகள் | 17 | 1,127,031 | 612,683 |
| பெறப்பட வேண்டியவை | 18 | 23,960,416 | 44,321,486 |
| காசுக்குச் சமமானவைகளும் | 19 | 174,412,997 | 147,630,935 |
| | | 278,031,928 | 268,593,915 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **4,599,843,959** | **4,396,637,403** |
| **உரிமையாண்மை பொறுப்பு** | | | |
| மூலதனம் | | | |
| ஒத்திவைக்கப்பட்ட மூலதன மானியம் | 20 | 2,531,594,632 | 2,362,934,458 |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 21 | 19,722,469 | (15,219,443) |
| | | 2,551,317,101 | 2,347,715,015 |
| **திரண்ட நிதியம்** | | | |
| அமைச்சரவை அங்கீகரித்த கட்டட செயற்றிட்டங்கள் | | 62,165,273 | 80,909,035 |
| சொத்து மறுபடிவிலைமதித்தல் மிகை | | 2,502,382,782 | 2,502,382,782 |
| நிறுவனத்தின் பொது ஒதுக்கம் | | (1,388,348,420) | (1,172,021,820) |
| | | 1,176,199,635 | 1,411,269,997 |
| **ஒதுக்கமும் மட்டுப்படுத்தப்பட்ட நிதியமும்** | | | |
| விசேட மானியங்கள் | 23 | 136,040,964 | 84,135,345 |
| ஆராய்ச்சி மானியங்கள் | 24 | 87,485,966 | 65,661,587 |
| அன்பளிப்பும் நன்கொடைகளும் | 25 | 8,683,798 | 2,920,615 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 26 | 34,476,643 | 27,774,841 |
| முற்பணமாகப் பெறப்பட்ட வருமானங்கள் | 27 | 190,674,625 | 273,120,141 |
| | | 457,361,996 | 453,612,529 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 28 | 302,474,226 | 68,003,666 |
| நிகழத்தக்க பொறுப்புக்கான ஏற்பாடு | 29 | 455,580 | 455,580 |
| | | 302,929,806 | 68,459,246 |
| **நடப்புப் பொறுப்புக்கள்** | | | |
| சென்மதி கணக்குகள் | 30 | 20,564,041 | 18,356,048 |
| அட்டுறு செலவுகள் | 31 | 57,166,920 | 59,184,773 |
| மீளளிக்கத்தக்க செலவுகள் | 32 | 34,304,461 | 38,039,795 |
| | | 112,035,421 | 115,580,616 |
| | | 4,599,843,959 | 4,396,637,403 |

இந்நிதி நிலை அறிக்கை 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் இணைந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.

யூ. ரி. எம். ஐ. டி. தென்னகோன்,
நிதியாளர்.

இந்நிதிநிலை அறிக்கையை தயாரித்து வெளியிடும் பொறுப்புடைய பல்கலைக்கழக பேரவையின் சார்பில் இதன் கீழ் ஒப்பமிடுகின்றோம்.

(பேராசிரியர்) சரத் அமுனுகம,
துணை வேந்தர்.

டபிள்யூ. எம். கருணாரத்தின,
பதிவாளர்.

கணக்கியல் கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.

களனி.
28, பெப்புருவரி 2012.

**நிதி அறிக்கைகள் குறித்த பொறுப்புக்கள்**

நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய நிதி அறிக்கைகள் தயாரிப்பதற்கு பல்கலைக்கழக பேரவையே பொறப்புக் கூறும் அமைப்பாகும். நிதி நிலை அறிக்கைகள் குறித்து திருப்தியின்மை, மற்றும் குறித்த காலத்தில் அதன் செயற்றிறன் குறித்த பார்வையியல் உண்மைத் தன்மை இல்லாதுவிடின் பேரவையினால் அனுமதிக்கமாட்டா. மேலும் பின்வருவன பேரவையால் தேவைப்படுததப்படுகின்றன.

- பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையை தேர்ந்தெடுத்து அதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தல்
- நியாயயப்பாடுகளும் கணக்கீடுகளும் ஏற்புடையது என்பதை உறுதிபப்டுத்தல்.

பல்கலைக்கழகத்தின் நிதி நிலை மற்றும் செயற்றிறன் தொடர்பாக எந்த வேளையிலும் விரிவான முறையில் உண்மைத்தன்மையுடன் வெளிப்படுத்தி விபரிக்கக்கூடிய வகையில் தேவையான அளவு கணக்கீட்டு ஆவணங்களை பேண வேண்டியது பல்கலைக்கழக பேரவையின் பொறுப்பாகும்.

**பேரவையின் பொறுப்பு அறிக்கை**

நடைமுறையில் உள்ள சட்டங்களிற்கும் பிரமாணங்களுக்கும் அமைய பல்கலைக்கழக நிதி அறிக்கை உண்மையாகவும் நேர்மையாகவும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகத்தின் நிதி நிலையினையும் செயற்றிறனையும் சரியான முறையில் வெளிப்படுத்துகின்றது என்பதையும் பேரவையின் உறுப்பினர்கள் எமது அறிவுக்க எட்டிய வகையில் உறுதிப்படுத்துகின்றோம்.

களனிப் பல்கலைக்கழக பேரவையின் சார்பாக,

(பேராசிரியர்) சரத் அமுனுகம,
துணைவேந்தர்.

10-50

---

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

2010, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயல் நிறைவேற்றுக் கூற்று

(இயல்புக்கேற்ற செலவுகளின் வகைப்படுத்தல் காட்டப்பட்டுள்ளது).

| | 2010, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு (ரூபா) | 2009, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு (ரூபா) |
|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | |
| மீண்டுவரும் மானியம் | 536,400,000.00 | 649,600,000.00 |
| தேறிய வருமானம் (நட்டம்) இதர செயற்பாடுகளிலிருந்து | 11,591,454.90 | 11,578,911.44 |
| இதர வருமானம் | 16,807,744.67 | 12,232,537.21 |
| பொது ஒதுக்கத்திலிருந்து நிதி | 119,000,000.00 | |
| | **683,799,199.57** | **673,411,448.65** |
| மாணவருக்கான நிதி உதவி | 71,643,050.00 | 62,945,050.50 |
| | **755,442,249.57** | **736,356,498.65** |
| **செயற்படுத்தல் செலவுகள்** | | |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 546,416,968.88 | 507,592,088.19 |
| போக்குவரத்துச் செலவுகள் | 4,731,035.48 | 5,376,087.96 |

| | 2010, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு (ரூபா) | 2009, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு (ரூபா) |
|---|---|---|
| ***செயற்பாட்டு செலவு** (தொடர்ச்சி)* | | |
| வழங்கல்களும் பயன்படுத்திய நுகர்வுப் பொருட்களும் | 29,783,040.35 | 23,472,187.66 |
| பராமரிப்பு | 10,169,353.81 | 8,344,481.42 |
| ஒப்பந்தச் சேவைகள் | 49,900,466.66 | 40,531,477.36 |
| ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | 142,314.10 | 167,650.10 |
| தேய்மானம் மற்றும் கடன் தீர் நிதிச் செலவுகளும் | 86,036,142.70 | 101,953,469.37 |
| இதர செயற்பாட்டுச் செலவுகள் | 31,076,835.42 | 22,774,283.33 |
| **மொத்த செயற்படுத்தல் செலவுகள்** | **758,256,157.40** | **710,211,725.39** |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை/குறை** | **(2,813,907.83)** | **26,144,773.26** |
| மாணவருக்கு நிதி உதவி | 71,643,050.00 | 62,945,050.00 |
| **மொத்த செயற்பாடுகளிலிருந்து மிகை/குறை** | **(74,456,957.83)** | **(36,800,276.74)** |
| அதி விசேட இனங்கள் (பதிவழித்தலும் பிற சீராக்கல்களும்) | 449,562.03 | 348,369.65 |
| **இக்காலத்திற்கான தேறிய மிகை (குறை) பொது ஒதுக்கத்திற்காக மாற்றப்பட்டது.** | **(74,906,519.86)** | **(37,148,646.39)** |

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

(பேராசிரியர்) வ. அரசரத்தினம்,
கணக்கீட்டு அலுவலர்,
துணை வேந்தர்.

ச. செ. இராமகிருஷ்ணன்,
நிதியாளர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

2010, திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலை பற்றிய கூற்று

| | 2010, திசெம்பர் . 31 ஆந் திகதி ஆண்டு ரூபா | | 2009, திசெம்பர் 31 ஆந் திகதி ஆண்டு ரூபா | |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறைசாரா சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, மற்றும் உபகரணம் | 863,604,312.46 | | 716,419,003.84 | |
| முதலீடு (நீண்ட காலம்) | 201,051,753.62 | | 171,558,664.80 | |
| நடைபெறும் மூலதன வேலை | 59,408,750.00 | **1,124,064,816.08** | 203,667,546.53 | **1,091,645,215.17** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | | |
| பொருட் பதிவேட்டுகள்/இருப்புகள் | 16,067,128.97 | | 13,454,948.95 | |
| வியாபாரமும் இதர பெற வேண்டியவையும் | 376,485,373.50 | | 313,394,117.44 | |
| முதலீடுகள் (குறுங்காலம்) | 7,390,773.67 | | 6,742,196.34 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 189,331,659.94 | **589,274,936.08** | 330,001,393.15 | **663,592,655.88** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **1,713,339,752.16** | | **1,755,237,871.05** |
| **பொறுப்புக்கள்:** | | | | |
| *நடைமுறைப் பொறுப்புக்கள்:* | | | | |
| சென்மதிகள் | 16,981,385.09 | | 23,147,603.05 | |
| அட்டுறு செலவுகள் | 4,763,075.39 | | 3,658,849.67 | |
| சுய நிதியீட்டு கற்கைகள் | 66,358,121.54 | **88,102,582.02** | 56,533,031.64 | **83,339,484.36** |

| *செயற்பாட்டு வருமானம்* | | *2010, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு (ரூபா)* | | *2009, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு (ரூபா)* |
|---|---|---|---|---|
| **நடைமுறைசாரா பொறுப்புக்கள்:** | | | | |
| சென்மதிகள் | 4,979,843.89 | | 4,307,936.40 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 178,398,183.50 | | 173,430,880.25 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதியம் | 235,870,806.90 | **419,248,834.29** | 204,716,062.71 | **382,454,879.36** |
| **மொத்தப் பொறுப்புகள்** | | **507,351,416.31** | | **465,794,363.72** |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **1,205,988,335.85** | | **1,289,443,507.33** |
| தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை திரட்டிய நிதியம் (மூலதன ஒதுக்கம் மானியம்) | 2,079,969,079.00 | | 1,968,581,754.50 | |
| **ஒதுக்கம்:** | | | | |
| பொது ஒதுக்கம் | (1,028,085,872.97) | | (822,459,627.30) | |
| பிணைக்கடப்பாட்டு ஒதுக்கம் | 154,047,269.82 | | 143,263,520.13 | |
| மூலதன ஒதுக்கம் | 57,860.00 | **1,205,988,335.85** | 57,860.00 | **1,289,443,507.33** |
| மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை | | **1,205,988,335.85** | | **1,289,443,507.33** |
| மொத்தப் பொறுப்புகள் | | **507,351,416.31** | | **465,794,363.72** |
| மொத்தப்பொறுப்புகளும்/உரிமையாண்மை (ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த நிதியங்கள்) | | **1,713,339,752.16** | | **1,755,237,871.05** |

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் வ. அரசரத்தினம்,
கணக்கீட்டு அலுவலர்,
துணை வேந்தர்.

ச. செ. இராமகிருஷ்ணன்,
நிதியாளர்.

என்/ஜேஎப்/சீ/ஜேயூ/எப்ஏ/2010

2011, யூலை 21.

உபவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2010, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2010, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (1) மற்றும் (111) ஆம் பிரிவுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை பல்கலைக்கழக உபவேந்தருக்கு 2011, ஏப்பிறல் 29 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

1.2 ***நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு:***

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்து நியாயமாகச் சமர்ப்பிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படச் சாத்தியமான பொருண்மையான தவறான கூற்றுக்கள் இன்றி

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நியாயமாக சமர்ப்பிப்பதற்கு ஏற்றவாறு உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தி பராமரித்துச் செல்லல் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகளை தேர்ந்தெடுத்து பிரயோகித்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கேற்ப நியாயமான கணக்கீட்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளல் என்பன இப்பொறுப்பினுள் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்:

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிசார் கூற்றுக்களின் மீளாய்வு கொடுக்கல் வாங்கல்களினதும் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கல்களையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக காணப்பட்டது. நிதிசார் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டது. நிதிசார் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளை தெரிவு அடிப்படையில் பரிசோதனை செய்தல், நிதிசார்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் பின்பற்றப் பட்ட கணக்கீட்டு கொள்கைகள் முக்கிய மதிப்பீடுகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் கணக்காய்வுப் பணிகளுக்குத் தேவையான போதியளவு தகவல்களும் விளக்கமளிப்புக்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கமைய எனது அபிப்பிராயத்துக்கு ஏற்ற அடிப்படையொன்று எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது என்பது எனது நம்பிக்கையாகும். 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்:

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்படட் உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 2010, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010, திசெம்பர் 31 இல் உள்ளபடி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்:

(அ) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் மீது பெறுமானத் தேய்வு செய்யப்படுவதனை தவிர்ப்பதற்காக இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதுதனித்தனியாக பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டிய போதிலும் இத்தேவைப்பாட்டிற்கு முரணாக பல்கலைக்கழகம் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியின் மீது பெறுமானத் தேய்வினை சாட்டுதல் செய்திருந்தது. ஆகவே கணக்குகளில் காட்டப்பட்டுள்ள 81,068,839 ரூபா பெறுமானத் தேய்வின் உண்மைத் தன்மை, ஒவ்வொரு சொத்தினதும் சரியான நிலைமையினை வெளிப்படுத்தப்பட்டுள்ளதா எனக் கருத முடியாதுள்ளது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1995, ஒற்றோபர் 05 ஆந் திகதிய 649 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகளின் பெறுமதியின் மீது பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படக்கூடாது. இருப்பினும் காணியினதும் கட்டிடங்களினதும் பெறுமதிகளை வெவ்வேறாக இனங்காணத் தவறியமை காரணமாக காணிகளின் மீதும் 5% சதவீதத்தில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் உரிமைத்துவ மாற்றக் கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தகப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்டதும் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வருகின்றதுமான நிலையான சொத்துக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 இன் படி மீள விலைமதிக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

*2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள் :*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-*

*(அ) 21,91,072 ரூபா பெறுமதியான 117 நாளேடுகள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை பல்கலைகழகத்தினால் பெற்றுக் கொள்ளப்படாதிருந்த போதிலும் பிழையாக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன.*

*(ஆ) மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்ட 10,288,750 ரூபா தொகையான நிர்மாண வேலைகளை காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக கணக்குகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தன.*

*(இ) மீளாய்வாண்டில் இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த மூன்று பேருந்துகள் (சிடி ரைடர்) பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.*

*(ஈ) வெள்ளி விழா நிதியத்திலிருந்து ரூபா 243,100 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டி 2006 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளிலிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.*

*(உ) பிணைமுறி கடப்பாட்டு மேலதிக அறவீட்டு தொகையாகிய மொத்தம் 2,178,090 ரூபா இனை சென்மதி என கணக்குகளில் தனியாக காண்பிப்பதற்குப் பதிலாக பெறவேண்டிய பிணைமுறி கடப்பாட்டு கணக்கிற்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.*

*2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்:*

*பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-*

*(அ) 2007 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பான சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்குகளில் உள்ள தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் 221,675 ரூபா ஆக இருந்தது.*

*(ஆ) வழங்கல் முற்பணம், இடம்பெயர்ந்த பதவியணியினர் சம்பள முற்பணம், கட்டட முற்பணம், சில்லறைக் கடன்பட்டோர் மற்றும் பதவியணியினர் கடன் மீதிகளின் கூட்டுமொத்தமாகிய 157,349,632 ரூபா ஆனது 01 தொடக்கம் 23 வருட கால வீச்சில் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இம் மீதிகளின் அறவீடு ஐயத்திற்குரியதாகவுள்ளன.*

*(இ) புத்தகப் படிகள் காரணமாக கல்விசார் உத்தியோகத்தர் ஒருவரிற்கு 1997 இல் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 37,455 இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.*

*(ஈ) கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின்படி 2000 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உடன்படிக்கைகளையும் பிணைமுறிக் கடப்பாடுகளையும் மீறிய 133 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 117,530,741 தொகை பெறப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும் இத் தொகையினை தொடர்புடைய விரிவுரையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2011, யூன் 30 வரை பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.*

*2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை:*

*கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,750,016,314 கூட்டுத்தொகையான சொத்துக்கள், செலுத்த வேண்டியவைகள் மற்றும் பெறுமானத் தேய்வு என்பவற்றினை மெய்மையாய்வு அறிக்கைகள், உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வு, விபரமான பட்டோலைகள் போன்ற இல்லாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.*

*2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை :*

*பின்வரும் சட்டங்கள், திறைச்சேரிச் சுற்றறிக்கைகள், அரசாங்க நிதிப் பிரமாணங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி நிறுவனங்களிற்குமான தாபன விதிக்கோவை போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.*

*(அ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 மற்றும் 155 ஆம் பிரிவுகள்*

*(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல. 03, 16 மற்றும் 18*

*(இ) நிதிப் பிரமாணங்கள் : இலக்கங்கள் 103(1), 104, 109, 264, 271(2)(பீ), 570, 571, 756, 845, 846(3), 1645 மற்றும் 1646.*

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்குமான தாபன விதிக்கோவை

V ஆம் அத்தியாயத்தின் 7: 6, 7: 6 : 2 மற்றும் 7: 8 ஆம் பிரிவுகள்
XX ஆம் அத்தியாயத்தின் 3 : 1 ஆம் பிரிவு
XXIV ஆம் அத்தியாயத்தின் 3 : 1 ஆம் பிரிவு
XXV ஆம் அத்தியாயத்தின் 2 : 2 (எப்) ஆம் பிரிவு
XXVI ஆம் அத்தியாயத்தின் 2 : 4 மற்றும் 5 ஆம் பிரிவுகள்
XXVI ஆம் அத்தியாயத்தின் 3 : 3 ஆம் பிரிவு
XXVII ஆம் அத்தியாயத்தின் 9: 4 ஆம் பிரிவு

(உ) 1976, யூலை 19 ஆந் திகதிய 828 ஆம் இலக்க திறைசேரியின் சுற்றறிக்கை.

(ஊ) 1990, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க, 1995, மாச்சு 16 ஆந் திகதிய 11/1995 ஆம் இலக்க மற்றும் 2004, திசெம்பர் 27 ஆந் திகதிய 22/99 (IV) 2004 ஆம் இலக்க, 2009, ஏப்பிறல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 2009, யூலை 17 ஆந் திகதிய 09/2009 (I) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைகள்

(எ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் :

(i) 1980, பெப்புருவரி 25 ஆந் திகதிய 63 ஆம் இலக்கம்
(ii) 1994, ஏப்பிறல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்கம்
(iii) 2010, பெப்புருவரி 15 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்கம்

(ஏ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2007, சனவரி 18 ஆந் திகதிய 03 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சுற்றறிக்கை

**3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

3.1 ***நிதி மீளாய்வு*** :

3.1.1 *நிதி விளைவுகள்*

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின்படி மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியங்களைக் கணக்கிலெடுக்க முன்னர் முன்னைய ஆண்டுக்கான ரூபா 686,748,646 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கு 611,306,520 ரூபா பற்றாக்குறையினை விளைவித்திருந்தது. மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 536,400,000 மானியத்தினைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டுக்கான பற்றாக்குறை ரூபா 74,906,520 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 649,600,000 மானியம் காரணமாக அவ்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 37,148,646 வரை குறைவடைந்திருந்தது.

3.1.2 குறித்துரைத்த நிதியங்களின் பயன்படுத்துகை :

பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 29,493,089 தொகையான குறித்துரைத்த நிதியங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாது நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

3.1.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் :

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் பட்டக் கற்கைகள் பீடம் மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் சராசரியாக மாதாந்தம் ரூபா 179 மில்லியன் காசு மீதி வைத்திருக்கப்பட்டிருந்த போதிலும் இப்பணத்தினை வட்டியினை ஈட்டித் தரக்கூடிய மூலமொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக குறிப்பிடத்தக்களவு வருமானம் பல்கலைக்கழகத்திற்கு இழப்பாகியிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் விருந்தினர் விடுதி வசதி காணப்படுவதுடன் விருந்தினர் விடுதிக்கு காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 248,640 கூட்டுத்தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த விருந்தினர்களிற்காக பல்வேறு வாடி வீடுகளுக்கு வதிவிட கட்டணங்களாக (உணவு மற்றும் வதிவிடம்) ரூபா 528,459 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்திற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து மூன்று புதிய பேரூந்துகள் கிடைத்திருந்த போதிலும் இப் பேரூந்துகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக தனியார் வான்களை வாடகைக்கு அமர்த்தியமைக்காக ரூபா 1,000,576 வாடகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

3.1.4 சொத்துக்கள் முகாமைத்துவம் :

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) இரண்டு ஸ்கூட்டர்கள் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 617,151 பெறுமதியான 35 வகையான பொருட்கள் ஒன்று தொடக்கம் பத்து ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன. இவ்விடயம் எனது முன்னைய ஆண்டுகளிற்கான அறிக்கைகளின் மூலமும் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. எனினும், இச் சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக 2011, யூன் 30 வரை பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 200,305 கூட்டுமொத்தமான 10 வகையான 5,258 பதிவேட்டுப் பொருட்கள் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 182,400 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நேரப் பதிவு இயந்திரம் 2001 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ஏ) ரூபா 2,137,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 225 இரும்புக் கட்டில்கள் நான்கு ஆண்டுக்ளுக்கும் மேலாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.1.5 இனங்காணப்பட்ட நட்டங்கள் :

(அ) நூலகப் புத்தக இழப்புக்களின் பெறுமதியாகிய ரூபா 161,633 மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

3.1.6 செயற்திட்ட தாமதங்கள் :

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) பல்கலைக்கழக பெண்கள் விடுதித் தொகுதிக்கு கழிவு நீர் அகற்றல் முறைமையொன்றினை அறிமுகம் செய்வதற்காக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2008 ஆம் ஆண்டில் மதியுரைக் கட்டண முற்பணக் கொடுப்பனவாக ரூபா 750,375 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ பீடத்தில் கேட்போர் கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,611,885 ஆனதோர் தொகை 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின்போது நிர்மாணக் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாணப் பணிகள் இதுவரை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நீண்ட தாமதம் காரணமாக நிர்மாணக் கிரயம் பெருமளவில் அதிகரிக்கும் என்பதுடன் இக்கட்டடத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவுமில்லை. அதற்கும் மேலாக 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் இதுவரை தொடங்கப்படாத உள்ளக அலங்கார வேலைகளுக்காகக் கட்டடத் திணைக்களத்திற்கு ரூபா 13,000,000 செலுத்தப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பில் 2010, யூலை 29 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இடம் பெற்ற செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் மேற்படி செயற்திட்டங்களின் மந்தகதியான செயன்முன்னேற்றம் தொடர்பில் கௌரவ உயர் கல்வி அமைச்சர் தீவிர கவனம் செலுத்தியிருந்ததுடன் இதனை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பெறுபேறுகள் தொடர்பில் தனக்கு அறிவிக்குமாறும் பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதன் பின்னரும் கூட இதுவரை வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. 2011, மார்ச் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக வெளிக்களப் பரிசோதனையில் உள்ளக கூரையடித்தல், மின்சார இணைப்பு, வாயு சீராக்கல் மற்றும் இருக்கைகள் இது வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. அதன் விளைவாக பல்கலைக்கழகத்தினால் ரூபா 20 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மருத்துவ பீட மாணவர்களினால் பத்து ஆண்டுகளிற்கும் மேலாக அவ் வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.

(இ) திருநெல்வேலியில் உள்ள மாணவர் விடுதிக்காக நீர்த்தாங்கியொன்றினை நிர்மாணிப்பதற்கு கட்டடத் திணைக்களத்திற்கு 1989 இல் ரூபா 2,000,000 முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,590,000 பெறுமதியான வேலைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் விளைவாக இவ்வசதியின்றி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) பல்கலைக்கழகத்தில் உள்ளக பிரதேச வலைப்பின்னல்/அகன்ற பிரதேச வலைப்பின்னல் (LAN/WAN) செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 1,485,208 தொகை கொழும்பிலுள்ள கம்பனியொன்றுக்கும் மேலும் ரூபா 10,171,618 எஸ்ஐடீஏ ஐரீ வலைப்பின்னல் செயற்திட்டத்திலிருந்து அதே கம்பனிக்கும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்த செயற்திட்டம் தொடர்பில் எவ்வித செயன்முன்னேற்ற அறிக்கைகளும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. இச்செயற்திட்டமானது 2005 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தொடங்கப்பட்டிருந்த போதிலும் 2011, யூன் 30 வரையிலும் இது முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டக் குறிக்கோள் எதிர்பார்த்த விதத்தில் அடையப்பட்டிருக்கவில்லை.

(எ) பம்பைமடுவவில் வவுனியா வளாகத்திற்கு நீர்த்தாங்கி ஒன்றையும் நீரேந்து அறையொன்றையும் நிர்மாணிப்பதற்காக 2004, திசெம்பர் 31, 2005, நவெம்பர் 16 மற்றும் 2007, ஒற்றோபர் 04 ஆந் திகதிகளில் முறையே ரூபா 3,200,000 ரூபா 3,014,000 மற்றும் ரூபா 5,615,000 ஆன மூன்று முற்பணங்கள் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபையின் கட்டிட திணைக்களத்தின் பிரதான பொறியியலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

நீரேந்து அறையின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருந்தன. இருந்த போதிலும் நீர்தாங்கி மற்றும் மிகுதி வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. அதேநேரம் கட்டிடத் திணைக்களத்தினால் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இடைநிறுத்தும் வரைக்கும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,439,956 ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. மிகுதி வேலைகளுக்காக மற்றுமோர் ஒப்பந்தக்காரருடன் 2006, நவெம்பர் 10 ஆந் திகதி ரூபா 5,615,000 பெறுமதிக்கு புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆயினும் 2011, யூன் 30 ஆந் திகதிவரை வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம் :

பொருத்தமான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றைப் பின்பற்றாது அநேக சந்தர்ப்பங்களில் தற்காலிக விரிவுரையாளர்கள், பாடப் போதகர்கள், செயன்முறையாளர்கள் போன்றோர் பிரிவுத் தலைவர்களினால் மேற்கொண்ட கோரிக்கைகளின் பேரிலேயே நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

### 3.3 கற்கைநெறிகளும், பரீட்சைகளும்:

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தில் 22 பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5,395 ஆகும். மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்த மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 487,578,520 ஆகும். ஆண்டுக்கு மாணவர் ஒருவருக்கான சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 90,376 ஆக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினாலும் நடாத்தப்படுகின்ற பல்வேறு கற்கைநெறிகளுக்கும் பரீட்சைகளை நடாத்த வேண்டிய திகதிகளும் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய இலக்குத் திகதிகளும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் சில பீடங்களில் குறிப்பிடத்தக்களவு தாமதம் நிலவியமை மேலும் அவதானிக்கப்பட்டது. 1995, யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சைகள் நடைபெற்று மூன்று மாதகாலத்தினுள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 4 தொடக்கம் 14 மாத கால வீச்சில் பெறுபேறுகளை வெளியிடுதல் தாமதமடைந்திருந்தது.

### 3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு:

பாதிடப்பட்டவைகளுக்கும் உண்மையானவைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் எனது விரிவான அறிக்கையின் மூலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்

(ஆ) நூலக நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) குறித்துரைத்த நிதியங்களின் பாவனை

(உ) செயற்திட்டத் தாமதங்கள்

(ஊ) பெற வேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

(எ) மனித வள முகாமைத்துவம்

(ஏ) பாதீடு

எச். ஏ. எஸ். சமரவீர,
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**2010, திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள்மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பற்றிய ஆளும் அதிகார சபையின் அவதானிப்புகள்**

2.2.2. கணக்கு வைத்தலில் உள்ள குறைபாடுகள் :

(அ) வருடாந்த சந்தாப்பணம் செலுத்துவதன் மூலம் நூலகத்துக்கு சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இவற்றில் அதிகளவானவை நடைமுறை நிதி ஆண்டின் ஒதுக்கீட்டில் இருந்து கொடுப்பனவு செய்யப்படுகின்ற போதிலும் அடுத்த ஆண்டிலேயே பெறப்படுகின்றன. இது நூலகத்தின் நீண்ட கால வழக்கத்தில் உள்ளது. எனினும் இது தொடர்பான ஒழுங்குகளும் மற்றும் பெற்றுக் கொண்ட இச் சஞ்சிகைகள் தொடர்பான காலாண்டு அறிக்கைகளும் தயாரிக்கப்படுவதுடன் அவை நிதியாளருக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் சஞ்சிகைகள் தொடர்ந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதன் நிலுவைகள் குறைக்கப்பட்டுள்ளன. நாற்பத்து ஒன்பது சஞ்சிகைகளும், பருவ இதழ்களும் ரூபா 540,886.64 தவறுதலாக புத்தகங்கள், பருவ இதழ்கள் கணக்கில் அவை பெறப்படாமலேயே உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஆ) நடைமுறை வேலை.-
2011 ஆம் ஆண்டின் காணி, கட்டட கணக்குக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட உள்ளது.

(இ) 2011 ஆம் ஆண்டு கணக்குகளில் நடைமுறைப்படுத்துவதற்கு குறிக்கப்பட்டுள்ளது.

(ஈ) கணக்குகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(உ) பிணை மற்றும் முறிவு தொடர்பான கொடுக்க வேண்டிய தொகைக்கு கணக்கொன்றுஉருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.3. வருமதி மற்றும் சென்மதிக் கணக்குகள் :

(அ) வருமானமாக கணக்கிடுவதற்கோ அல்லது நிலுவைகளை தீர்ப்பதற்கோ பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) (i) சில்லறை கடன்படுநர், சேமலாபநிதி கடன் போன்றவை தொடர்பாக-
உரிய தொகைளை வசூலிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ii) கட்டட முற்பண மீதி தொகை தொடர்பாக,- கட்டட திணைக்களத்தில் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கோரி முற்பண கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

(iii) ஊழியர் கடன்.-31.12.2010 ஆந் திகதியில் மீதியாக உள்ள தொகை ரூபா 99,635,946.00 இதில் ரூபா 1,255,675.00 தொகையானது ஆறு ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட கடனாகும். இதனை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(இ) தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

